## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை - 2013

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(7) பிரிவின் பிரகாரம் நிதியச் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(1) பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 39 இன் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதி இறுதியிலும் நிதிச் சொத்து அல்லது சொத்து தொகுதியொன்று சேதமடைந்ததா என ஏதேனுமொரு விடயமொன்று அடிப்படையாக இருக்கின்றதா என்ற மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், ஒவ்வொரு முதலீடு தொடர்பாகவும் இடர் மதிப்பீடொன்றும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனினும் அதற்கு முரணாக பங்கு சந்தையில் விலை குறைவடைந்ததை அடிப்படையாகக் கொண்டு பங்குச் சந்தையின் முதலீடுகளிலிருந்து 2013 சனவரி 01 ஆம் திகதியில் ரூபா 1,506,639,000 தொகையும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 129,129,000 தொகையுமாக ரூபா 1,635,768,000 கூட்டுத்தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளின் கிரயத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. அத்தோடு பங்கு விலை பதிவழிக்கும் போது 2002 ஆம் ஆண்டிலிருந்து காணப்படும் சபையின் முதலீடு முறையாக இனங்காணப்படாமல் இலாபத்தின் மூலம் நியாயமான பெறுமதி வகைப்படுத்தப்படுத்தலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் ரூபா 183,067,000 கிரயத்திலான நிலையான சொத்துக்கள் 25 ஆண்டு காலமாக குறைந்து செல்லும் முறைமையின் கீழ் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதாகவும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற சொத்துக்கள் காணப்பட்ட போதிலும் அதன் நியாயமான பெறுமதியினை காண்பிப்பதற்காக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 34 ஆம் பிரிவின் பிரகாரம் மீள்கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் பிரகாரம் சபையின் பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுடன் தொடர்புடைய தரப்பினர் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 தொடர்ந்தியங்குதல்**

சபையினால் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் 3 சதவீதமான கட்டாய வட்டி தவிர பிரேரிக்கப்பட்ட வருடாந்த இலாப சதவீதம் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை 7 சதவீதமாக மாற்றமுறாது பேணப்பட்டிருந்தது. இந்த இலாப பிரதிபலனை பிரேரிப்பதற்காக போதியளவில் வருடாந்த செயற்பாட்டு மிகையொன்று சபையிடம்

இல்லாதிருந்தமையால் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை முறையே 746 மில்லியன், ரூபா 2,089 மில்லியன் மற்றும் ரூபா 446 மில்லியன் முன்னைய ஆண்டுகளில் இலாப பகிர்வு ஒதுக்கத்திலிருந்தும் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திலிருந்தும் தேவையான நிதிஏற்பாடுகளை பெற்றுக்கொண்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2.2.6 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 2,596 தொகையான தேறாத இலாபம் மீளாய்வாண்டின் போது இலாப கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலைமை அடிப்படையில் இந்நிதியம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருவது அவதானிக்கப்படுகின்றது.

**2.2.3 அங்கத்தவர் கணக்குகளில் செலவு வைக்கப்படாத உதவு தொகை**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கத்தவர் நிதியக் கணக்கு மீதி ரூபா 174,252 மில்லியன் என நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தபட்டபோதும், அத்திகதியில் உள்ளவாறான அங்கத்தவர் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்த தொகை ரூபா 151,948 மில்லியனாக இருந்தது. இத்தினத்தில் உள்ளவாறு நிதியத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த எனினும் 2014 யூன் 17 ஆந் திகதி வரையிலும் அங்கத்தவர் கணக்கில் செலவு வைக்கப்படாத தொகை ரூபா 22,304 மில்லியனாக இருந்தது. இத்தொகையில் ரூபா 9,496 மில்லியன் கடந்த 33 ஆண்டுகளின் போது பெறப்பட்டனவாகும். எனினும், 2014 யூன் 17 ஆந் திகதியளவிலும் அங்கத்தவர் கணக்குகளில் செலவு வைக்கப்படாதிருந்த அங்கத்தவர் உதவு தொகையாகும். எஞ்சிய ரூபா 12,808 மில்லியன் தொகை மேற்குறிப்பிட்ட பெறப்பட்ட உதவுதொகைகளுக்குரியதும் அவ்வப்போது அங்கத்தவர் கணக்குகளில் செலவு வைக்கப்பட வேண்டியதுமான வட்டித் தொகையாக இருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவு வைக்கப்படாத இத்தொகை தொடர்பான காலப் பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| பெறப்பட்டு, அங்கத்தவர் எனினும் அங்கத்தவர் கணக்குகளில் செலவு வைக்கப்படாதிருந்த மீதிகளது காலப் பகுப்பாய்வு | இதுவரை கணக்கிலிடப்படாத உதவு தொகை |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 1 முதல் 5 ஆண்டுகள் வரை | 7,553 |
| 5 முதல் 10 ஆண்டுகள் வரை | 814 |
| 10 முதல் 15 ஆண்டுகள் வரை | 425 |
| 15 முதல் 20 ஆண்டுகள் வரை | 231 |
| 20 முதல் 25 ஆண்டுகள் வரை | 215 |
| 25 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை | 258 |
| மொத்தம் | 9,496 |

முன்னைய ஆண்டின் அங்கத்தவர் கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாதிருந்த மீதி ரூபா 4,100 மில்லியனாக இருந்ததுடன், அது மீளாய்வாண்டின் போது ரூபா 9,496 மில்லியன் வரை அதிகரித்திருந்தமையால் வருடாந்த அங்கத்தவர் நிதிய கணக்கிற்கு பங்களிப்புத் தொகையாக கிடைக்கப்பெறும் எனினும் அங்கத்தவர் நிதியக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாத அளவு ஆண்டுதோறும் அதிகரிப்பது அவதானிக்கப்பட்ட போதிலும், அதனைச் சீராக்குவதற்கு போதியளவு கருத்தில் எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மொத்த முதலீட்டு உழைப்புக்களிலிருந்து வருடாந்தம் 3 சதவீதத்திற்கு குறையாத வட்டியை நிதியத்தின் அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 4,752,333,000 தொகையான 3 சதவீதமான வட்டித்தொகையை செயற்பாட்டுச் செலவினமாக கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 4,752,333,000 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மூலதன இலாபமாக விரிவான வருமானக் கூற்றில் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 171,962,000 தொகை 2013 சனவரி 01 இல் உள்ளவாறு கிரயத்திற்குரிய கணக்கிடப்பட்ட இலாபமொன்று அல்லாதமையால் மீளாய்வாண்டின் விரிவான வருமானம் பிழையாக இருந்தது.

(இ) கலைப்பிற்குட்பட்டிருந்த 2 கம்பனிகள் மற்றும் உத்தியோகபூர்வ பட்டியலில் இருந்து அகற்றப்பட்டிருந்த கம்பனியொன்றின் 803,270 பங்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 29,293,854 தொகையை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஈடுசெய்யப்பட்டிருந்தமையால் அம்முதலீடு ஐந்தொகையின் நிதிச் சொத்துக்களில் பிரதிபலிக்கப்படவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டிற்குரிய வரி மீளப் பெறுவனவு, வரி மிகை ஏற்பாடு மற்றும் அங்கத்தவர் கணக்கு இணக்கம் ரூபா 454,624,000 தொகை பின்னோக்கி சீராக்கம் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானமாக கருதப்பட்டிருந்தது.

### 2.2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1980 ஆம் ஆண்டின் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் முதலீடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட இலாபங்களிலிருந்து பங்குலாபம் பிரேரிக்கப்பட வேண்டும். எனினும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி பிணை முறிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 137,546,313,369 தொகைக்காக மீளாய்வாண்டின் போது கிடைக்க வேண்டியிருந்த உள்ளவாறான வட்டி வருமானமான ரூபா 10,251,865,269 தொகையை மீளாய்வாண்டில் அங்கத்தவர்களுக்கு பங்குலாபம் வழங்குவதற்காக பயன்படுத்துவதற்குப் பதிலாக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 12,847,398,332 தொகையான நிலையான வட்டியைப் பயன்படுத்தி ரூபா 2,595,533,063 தொகை தேறாத இலாபமொன்று அங்கத்தவர்களுக்கு பங்குலாபம் செலுத்துவதற்ககாக பயன்படுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே காட்டப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(அ) 2013 சனவரி மாதம் 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிதியச் சபை பங்குச் சந்தையில் 109,134,215 ஆன பங்குகளில் ரூபா 8,085,181,220 தொகையான முதலீட்டிற்காக பங்கு கிரயத்திற்குரித்தாக தயாரிக்கப்பட்ட அறிக்கை

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 409,742,000 தொகையான நிலையான சொத்துக்களை பௌதீக ரீதியில் உறுதி செய்வதற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை.

(இ) சபையின் முதலீட்டுக் கொள்கைக் கூற்று பொது திறைசேரியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டிருக்கவில்லை. எனினும் ரூபா 1,635,768,000 தொகையான முதலீடு புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கும் நட்டத்தில் பங்குகளை விற்பனை செய்வதற்குரிய அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் பொது திறைசேரியின் அங்கீகாரம்.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

1995 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்து வரும் உரிமை கோரப்படாத மரண நலன்கள் ரூபா 8,597,637 தொகை, 2001 ஆம் ஆண்டிலிருந்து வரும் நிறுத்தி வைக்கப்பட்ட நலன்கள் ரூபா 13,969,151 தொகை விண்ணப்பிக்கப்படாத நலன்கள் ரூபா 5,182,506 தொகையும் தபால் திணைக்களத்திலிருந்து காசுக் கட்டளைகளினூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட பங்களிப்புத் தொகை ரூபா 3,647,232 ஆக ரூபா 31,396,526 அங்கத்தவர் பணத்தை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் கடிதங்கள் | |
| (i) 2013 பெப்ரவரி 05 ஆம் திகதிய டிஎம்எஸ்/சீ2/2/42 ஆம் இலக்க கடிதத்தின் 02 ஆம் பந்தி | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைமைக்கு முரணாக பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட புதிய சம்பள முறை 2013 மே 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2012 யூலை 12 ஆம் திகதிய டிஎம்எஸ்/சீ2/2/42 ஆம் இலக்க கடிதத்தின் 6 ஆம் பந்தி | பணிப்பாளர் சபை செயலாளர் பதவி நீக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக பணிப்பாளர் சபையால் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பணிப்பாளர் சபை செயலாளரின் ஒப்பந்த காலம் உரிய தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொண்ட முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் 2012 ஒக்தோபர் முதல் மீண்டும் நீடிக்கப்பட்டிருந்தது. |
| (iii) 2013 திசெம்பர் 09 ஆந் திகதிய 2013/01 (1) ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு | சுற்றறிக்கைக்கு முரணாக அமைச்சரவையின் அங்கீகாரம் இல்லாமல் மீளாய்வாண்டின் போது சபையின் ஊழியர்களுக்கு ரூபா 58,847,962 மிகையூதியமாக வழங்கப்பட்டி ருந்தது. |

(ஆ) **பொது முயற்சிகள் மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் பொது முயற்சிகள் தொடர்பான கூட்டக் குறிப்புக்கள்**

| | |
|---|---|
| (i) 1998 மார்ச் 18 ஆந் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை, 1997 நவம்பர் 19 ஆந் திகதிய 26/47 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2011 ஒக்டோபர் 18 ஆந் திகதிய 56 ஆம் இலக்க பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத் தொடரின் குறிப்புகளது 19 ஆம் பந்தி | ஊழியர்களுக்கு 4.2 சதவீத வட்டி வீதத்தில் கூட்டுத்தாபன மற்றும் நியதிச் சட்ட சபைகளது ஊழியர்களுக்காக கடன் வழங்கப்படக் கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதும், சபை அதற்கு முரணாகச் செயற்பட்டு மேற்குறித்த வட்டி வீதத்திலும் அதற்குக் குறைந்த வட்டி வீதத்திலும் ஊழியர்களுக்குக் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு அந்த வட்டி வீதத்தில் வழங்கப்பட்ட கடனில் ரூபா 523,400,978 தொகையான கடன்தொகை யொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.<br><br>இக்கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு எதிர்கொள்ளக் கூடிய சிரமத்தைக் கருத்திற் கொண்டு இதற்காக நிதி, திட்டமிடல் அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதாக 2014 நவம்பர் 10 ஆம் திகதி கடிதத்தின் மூலம் பொது திறைசேரியின் பிரதிச் செயலாளர் அறிவித்துள்ளதாக சபையின் தலைவரால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ii) 2003 ஜுன் 06 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,083,969 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி உத்தியோகத்தர்களது சொந்த உழைப்பிலிருந்து அறவிடப்படாது சபையின் நிதியிலிருந்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. |
| (iii) 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பீஈடீ 45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ஆம் பிரிவு | கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்ட பிரிவு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருகக்வில்லை. |
| (iv) 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ 5 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2011 ஒக்டோபர் 18 ஆந் திகதிய 56 ஆம் இலக்க பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் குறிப்புகளினது 16 ஆவது பந்தி | பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் கட்டளைக்கு முரணாகவும் பொது திறைசேரியின் அங்கீகாரம் இல்லாமலும் மீளாய்வாண்டின் போது ரூபா 83,529,063 தொகை ஊழியர் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.<br><br>இக்கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு எதிர்கொள்ளக் கூடிய சிரமத்தைக் கருத்திற் கொண்டு இதற்காக நிதி, திட்டமிடல் அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதாக 2014 நவம்பர் 10 ஆம் திகதி கடிதத்தின் மூலம் பொது திறைசேரியின் பிரதிச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| | | அறிவித்துள்ளதாக சபையின் தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 1963 திசெம்பர் 12 அம் திகதிய 1024/600/29 சீடீ ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 1999 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் சபையின் நிதிச் செயலாற்றல் நடைமுறைக் கோவைக்காக பொது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் விளைவுகள் ரூபா 15,368 மில்லியன் மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 12,148 மில்லியனாக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,220 மில்லியன் ஆன அதிகரிப்பு காணப்பட்டது. எவ்வாறாயினும் இந்த அறிக்கையின் 2.2.4(அ) மற்றும் 2.2.5 இல் குறிப்பிடப்படும் விடயங்கள் ஆண்டின் மிகையுடன் சீராக்கப்பட்டால் ரூபா 15,368 மில்லியான மிகை ரூபா 7,348 மில்லியனால் அல்லது 48 சதவீதத்தால் குறைவடையக் கூடியதாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதி மீளாய்வு

கடந்த 06 ஆண்டுகளில் சபையின் அங்கத்தவர்களின் மொத்த உரிமைத்துவம், அந்த உரிமைத்துவங்களுக்குரிய மொத்த பங்களிப்புத் தொகை மற்றும் திரண்ட வட்டி என பகிரப்பட்ட விதம் என்பன கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | மொத்த பங்களிப்புத் தொகை | திரண்ட வட்டி | திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கத்தவர்களின் உரித்து |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2008 | 44,301 | 44,568 | 88,869 |
| 2009 | 49,834 | 53,223 | 103,057 |
| 2010 | 56,616 | 63,236 | 119,852 |
| 2011 | 64,054 | 71,432 | 135,486 |
| 2012 | 72,773 | 80,858 | 153,631 |
| 2013 | 82,653 | 91,599 | 174,252 |

மேற்படி தகவல்களின்படி, 2013 ஆம் ஆண்டளவில் சபையின் அங்கத்தவர்களுக்கு உரித்துடைய மொத்தத் தொகையில் 47 சதவீதம் பங்களிப்புத் தொகையாகவும் 53 சதவீதம் ஒட்டுமொத்த வட்டியாகவும் இருந்தது. அதனை 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அங்கத்தவர்களுக்கு உரித்துடைய தொகை 2013 ஆம் ஆண்டின் போது 13.42 சதவீதம் அதிகரித்திருந்ததுடன், அவ்வாண்டுகளுக்குரிய மொத்த பங்களிப்புத் தொகை 12.54 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் இறுதியில் செயலாற்றல் நிலைமை பின்வருமாறிருந்தது.

| விபரம் | உள்ளவாறான எண்ணிக்கை | நிதியத்தின் செயற்பாட்டுடன் தொடர்புடைய எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| தனியார் மற்றும் அரை அரச துறையைச் சார்ந்த ஊழியர்கள் | 3,661,132 | 2,200,000 | 60.09 |
| சேவை வழங்குபவர்கள் | 252,540 | 72,145 | 28.57 |
| நிதியத்தின் அங்கத்தவர் கணக்குகளது எண்ணிக்கை (மில்லியன்) | 10.0 | 2.2 | 22 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2013

2013 இன் இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முடிவில் இலங்கையில் தொழில் புரிபவர்களில் சுயதொழில் புரிபவர்கள் 2,710,596 என அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், அவர்களை நிதியத்தின் அங்கத்தவர்களாக சேர்த்து நிவாரணங்களை வழங்குவதற்கு போதியளவு வேலைத்திட்டமொன்றை சபையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடந்த 6 ஆண்டு காலத்தின் போது சபையினால் அமுல்படுத்திய புலமைப்பரிசில் வழங்கும் நடவடிக்கைக்குரிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | நிதியத்திற்கு பங்களிப்பு வழங்கிய செயற்படு அங்கத்தவர்களது எண்ணிக்கை | தமது பிள்ளைகளின் பொருட்டுப் புலமைப் பரிசில்களைப் பெற்ற அங்கத்தவர்களது எண்ணிக்கை | 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் கிரயம் | உயர்தர புலமைப்பரிசில் கிரயம் | மொத்த புலமைப்பரிசில் கிரயம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா |
| 2008 | 2,100,000 | 2,497 | 26,084,760 | - | 26,084,760 |
| 2009 | 2,100,000 | 3,000 | 46,811,006 | - | 46,811,006 |
| 2010 | 2,100,000 | 3,000 | 45,385,680 | - | 45,385,680 |
| 2011 | 2,100,000 | 6,669 | 74,051,599 | 23,640,000 | 97,691,599 |
| 2012 | 2,200,000 | 6,962 | 75,775,685 | 23,604,000 | 99,379,685 |
| 2013 | 2,200,000 | 6,982 | 84,124,844 | 17,888,234 | 102,013,078 |
| | 2,200,000 | 29,110 | 352,233,574 | 65,132,234 | 417,365,808 |

கடந்த 6 ஆண்டு காலப்பகுதியின் போது 2,200,000 பேரைக் கொண்ட ஒட்டுமொத்த அங்கத்தவர்களைக் கொண்ட நிதியத்திலிருந்து 29,110 அளவிலான வரையறைக்குட்பட்ட பேருக்கு மாத்திரமே புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன. கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலாதுள்ள எனினும் நிதியத்தில் அங்கத்துவத்தை வகிக்கும் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கும் அவர்களை அறிவூட்டுவதற்கும் முறையான வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கு சபை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கவனத்தில் கொள்ளாதிருந்தது.

(இ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை, சுழற்சிக் கணக்கு மற்றும் ஊழியர் முன்மொழிவு எண்ணிக்கை போன்ற செயற்பாட்டு புள்ளிவிபர தரவுகள் ஊழியர் சேமலாப நிதியத்தின் செயற்பாட்டு புள்ளிவிபர தரவுகள் என்பவற்றுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஊழியர் சேமலாப நிதியத்தின் பிரகாரம் | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பிரகாரம் | வேறுபாடு சதவீதம் |
|---|---|---|---|
| மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 14,987,000 | 10,000,000 | 67 |
| தற்போது பங்களிப்புத் தொகை அனுப்பும் சுழற்சி கணக்குகளின் எண்ணிக்கை | 2,350,000 | 2,200,000 | 94 |
| தொழில் தருனர்களின் எண்ணிக்கை | 70,392 | 72,145 | 102 |
| 2013இல் செலுத்தப்பட்ட நலன்களின் சதவீதம் வட்டியுடன் | 11.0 | 10.0 | 91 |

மூலம் : 2013 இன் இலங்கை மத்திய வங்கி அறிக்கை

சபைக்கு புதிய அங்கத்தவர்களைச் சேர்க்கும் போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அதிகளவிலான பங்களிப்பை பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது சபை அந்த இலக்கை அடைந்திருக்கவில்லை.

### 4.2 முதலீடும் முதலீட்டு வருமானமும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 கம்பனியிலிருந்து 2006 ஆம் ஆண்டிற்கும் அதற்கு முன்னைய காலப்பகுதிக்குமாக பெறவேண்டிய ரூபா 27,497,905 தொகையான கடன் வட்டி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 4 கம்பனிகளின் நிரல்படுத்தப்பட்ட கடன்களில் 2006 ஆம் ஆண்டின் போது முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 7,450,259 தொகை 2007 திசெம்பர் 09 ஆம் திகதி தேறக்கூடியதாக இருக்க வேண்டிய போதிலும், தொகுதிக் கடனுக்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீள பணம் கிடைத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது 6 கம்பனிகளுக்குரிய பங்குகள் கிரயத்தினை விட குறைந்த விலைக்கு விற்பனை செய்தமையால் ரூபா 22,334,639 தொகை நட்டமடைந்திருந்தது.

(ஈ) கணனி கம்பனியொன்றின் 188,800 பங்குகளை கொள்வனவு செய்வதற்காக சபையால் ரூபா 2,076,800 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், அக்கம்பனியின் திரவத்தன்மை தொடர்ந்தும் குறைவடைந்தமை மற்றும் 2012/13 ஆம் நிதியாண்டின் போது ரூபா 478 மில்லியன் நட்டமொன்று அடைந்திருத்தமை போன்ற காரணங்கள் அடிப்படையில் குறித்த கம்பனியை தொடர்ந்தும் நடாத்திச் செல்லல் பொருண்மையான நிச்சயமற்ற நிலைமையில் காணப்படுவதாக அக்கம்பனியின் கணக்காய்வினால் அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்த போதிலும், அதில் முதலீடு செய்த பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்டது.

(உ) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது பங்குச் சந்தையில் செய்யப்பட்ட முதலீடு, முதலீட்டிற்கு கிடைத்த வருமானம் மற்றும் வருமானத்தின் சதவீதங்கள் தொடர்பான விபரமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | கம்பனிகளின் எண்ணிக்கை | பங்குகளின் எண்ணிக்கை | முதலீட்டுத் தொகை ஜனவரி 01 இல் உள்ளவாறு | பெறப்பட்ட முதலீட்டு வருமானம் | வருமானத்தின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | |
| 2011 | 130 | 78,211,481 | 5,204,377,279 | 703,052,274 | 13.5 |
| 2012 | 107 | 101,999,123 | 7,713,939,116 | 324,179,030 | 4.2 |
| 2013 | 88 | 109,134,215 | 8,085,181,220 | 434,987,432 | 5.38 |

2013 ஆம் ஆண்டின்போது இத்தொகை திறைசேரி உண்டியல்களில் அண்ணளவாக 11.11 சதவீதம் வருடாந்த வட்டிக்கு முதலீடு செய்ய கூடியதாக இருந்ததுடன், அதன் பிரகாரம் வருமான இழப்பு ரூபா 463,276,202 அளவாக இருந்தது.

(ஊ) 1997 ஆம் ஆண்டின் போது சபை நம்பிக்கைப் பொறுப்பு நிதியமொன்றில் 1,000,000 அலகுகளில் ரூபா 10,000,000 முதலீடு செய்திருந்தது. இந்த அலகுகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் முதலீட்டுத் தொகைக்கு ஆரம்பத்திலிருந்து மீளாய்வாண்டு வரையிலும் எதுவித நலனும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், குறித்த காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 5 சதவீதத்தின் கீழ் இத்தொகை முதலீடு செய்ததிருந்தால் அதன் மூலம் கிடைக்க வேண்டியிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம் அண்ணளவாக ரூபா 12,920,000 தொகை இழக்கப்பட்டிருந்தது.

(எ) 2007 ஆம் ஆண்டிற்கு முன்னரான காலப்பகுதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தொலைபேசிக் கம்பனியொன்றின் 3,302,188 பங்குகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 110,340,299 ஆன முதலீடாக மாறியிருந்ததுடன், இம்முதலீடு கடந்த 7 ஆண்டு காலப்பகுதியில் பங்குச் சந்தையில் கொடுக்கல் வாங்கல்களிற்காக ஈடுபடுத்தப்படாமையால் அம்முதலீட்டிலிருந்து சபைக்கு மூலதன இலாபத்தை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. இம்முதலீட்டிலிருந்து 2013 ஆம் ஆண்டிற்காக கிடைக்கப் பெற்றிருந்த பங்குலாப வருமானம் ரூபா 2,526,174 தொகை அதாவது 2.29 சதவீதமான குறைந்த வருமான சதவீதமொன்றாக இருந்தது.

(ஏ) நிதிக் கம்பனியொன்றில் ரூபா 2,550,000 பெறுமதியான 30,600 பங்குகளில் செய்யப்பட்டிருந்த முதலீட்டில் பங்குச் சந்தை விலை தொடர்ச்சியாக குறைவடைந்தமை மற்றும் உரிய நிதிக் கம்பனி கடந்த சில ஆண்டுகளில் நட்டமடைந்திருந்ததால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு

இம்முதலீட்டிலிருந்து சபைக்கு மூலதன இலாபமோ அல்லது பங்குலாப வருமானத்தையோ பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஐ) 2013 ஆம் ஆண்டின் போது சபை 24 கம்பனிகளின் 18,817,090 பங்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 700,560,142 தொகையான முதலீட்டிலிருந்து சபைக்கு எவ்வித வருமானமொன்றும் கிடைத்திருக்கவில்லை. முன்னைய 4 ஆண்டு காலப்பகுதியில் அவ்வாறு வருமானம் எதுவும் கிடைக்காத சபையின் நிதி முதலீடுகளுடன் தொடர்புடைய கம்பனிகளது விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | கம்பனிகளின் எண்ணிக்கை | முதலீட்டுப் பங்குகளின் எண்ணிக்கை | முதலீட்டுத் தொகை |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 2010 | 17 | 4,111,468 | 119,083,880 |
| 2011 | 18 | 7,683,979 | 163,867,080 |
| 2012 | 25 | 13,046,750 | 226,125,038 |
| 2013 | 24 | 18,817,090 | 700,560,142 |

### 4.3 நிறுவகத்தினாலும் நிறுவகத்திற்கு எதிராகவும் தொடரப்பட்டுள்ள சட்ட சம்பவங்கள்

உடன்படிக்கை மீறியதற்குரிய சபைக்கு எதிராக வழங்கப்பட்ட பாதகமான நீதிமன்ற தீர்ப்பொன்றின் அடிப்படையில் தனியார் கம்பனியொன்றிற்கு இழப்பீடாக ரூபா 21,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் சபையால் இவ்வழக்குத் தீர்ப்பிற்கு எதிராக செய்யப்பட்ட மேன்முறையீட்டின் பிரதிபலனாக முறைப்பாட்டுக் கம்பனியால் மேற்குறித்த பெறுமதிக்கு சமமான வங்கி பிணைப்பொறுப்பொன்று நீதிமன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இத்தொகை சபைக்கு கிடைக்க வேண்டிய தொகையொன்றாக கணக்கிடப்பட்டிருந்த போதிலும், இக்கொடுப்பனவு பாதகமான வழக்குத் தீர்ப்பொன்றின் அடிப்படையில் ஏற்பட்டிருந்தமையால் இத்தொகை மீளக் கிடைப்பதில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்டது. எவ்வாறாயினும் குறித்த நீதிமன்ற செயற்பாடு 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் முடிவடைந்திருக்கவில்லை.

### 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரியின் அங்கீகாரம் இன்றி, சபையின் நோக்கங்களுக்கு முரணாக, சபையின் உத்தியோகத்தர்களால் நடாத்தப்படும் விளையாட்டுக் கழகத்திற்கு எதுவித உடன்படிக்கைக் கடப்பாடும் இன்றி ரூபா 3,000,000 கடன்தொகை மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன், இக்கடன் தொகை 24 தவணைகளில் 10 சதவீத வட்டி வீதத்தின் கீழ் மீளச் செலுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், குறித்த காலஎல்லையில் அதில் ரூபா 498,310 தொகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையின் புறம்பான நடவடிக்கைகளுக்காகவும் பல்வேறு தரப்பினர்களின் தேவைப்பாட்டிற்காக ரூபா 1,742,166 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) சபையானது கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச்சட்டத்தின் கீழ் இயங்கும் நிறுவனம் எனக் குறிப்பிட்டு மேலதிக நேர வேலை ஒரு மணித்தியாலத்திற்கு ஒன்றரை மணித்தியாலமாகவும் சனிக்கிழமை / ஞாயிற்றுக் கிழமை மற்றும் அரச விடுமுறை தினங்களில் 8 மணி மேலதிக நேர வேலை முடிந்ததும் நாட் சம்பளமும் சேர்த்துக்கொள்ளப்பட்டு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்படுவதால் 2013 ஆம் ஆண்டிற்கான சபையின் மேலதிக நேர வேலைக் கிரயம் ரூபா 18,000,252 தொகை செலவிடுவதற்கு

நேர்ந்திருந்தது. மேற்குறித்த அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கு சபையின் உத்தியோகத்தர்கள் ஒரு வாரத்தில் ஐந்தரை நாட்கள் பணியாற்ற வேண்டும். வருடாந்த விடுமுறை 21 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அதற்கு முரணாக உத்தியோகத்தர்களுக்கு வருடாந்தம் விடுமுறை 42 நாட்களாகவும் வாரம் ஒன்றிற்கு 5 நாட்கள் வேலையை நிறைவேற்றுவதற்கும் இடமளிக்கப்பட்டிருந்தது.

**4.5 இனங்காணப்பட்ட இழப்புகள்**

ரூபா 2,044,420 தொகையான நிலையான சொத்துக்களின் பற்றாக்குறை மீளாய்வாண்டின் போது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தன.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பதவிநிலைத் தரத்தில் 17 வெற்றிடங்களுடன் சபையின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 52 ஆக காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

நி.பி 133(2) இன் பிரகாரம் சபையின் சில பிரதான நடவடிக்கைகளை மேவுகை செய்யப்படும் வகையில் உள்ளகக் கணக்காய்வு திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

சபையின் பாதிடப்பட்ட செலவினத்தையும் வருமானத்தையும் மற்றும் உள்ளவாறான வருமானத்தையும் செலவினத்தையும் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுபாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பணம்
(இ) காலத்திற்கேற்ப அதிகாரச்சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள்
(ஈ) முதலீடு
(உ) அங்கத்தவர் கணக்குகளை பராமரித்தல்